(2) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 12/1973).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, விற்பனை வரியைப் பொறுத்தவரையில் அரசாங்க நோடிபிகேஷனின் மூலமாக கொண்டுவந்திருப் பதை சட்ட வடிவில் கொண்டு வருவதாக இருக்கிறோம். இப்போது அதன் விளக்கத்தைக் கூறுகிறேன்.

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு @(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/73) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"
என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) முதலாம் விவர அட்டவணையில் கட்டுமான இயந்திரம், சுரங்க யந்திரங்கள், நிலத்தைச் சமன்படுத்து-யந்திரங்கள், மண்வாரி டிரக்கு கள், ஆகியவை பற்றிக் குறிப்பாக பதிவு எதுவும் தற்போது இல்லை. இதன் விளைவாக மேற்சொன்ன சட்டத்தின் கீழ் இந்த இனங்களுக்கு வரி விதிப்பது குறித்து வரி விதிக்கும் அதிகாரிகள், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ள னர். இதைக் கருதி மேற்படி சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் இந்த இனங்களைத் தனிப்பட்ட இனமாக வகைப்படுத்துவதன் மூலம் இம்மா நிலத்தில் இயந்திரங்களின் விற்பனையின் மேல் முதல் விற்பனை 9 சதவீதம் என்றும் ஒரே படித்தான் வீதத்தில் வரி விதிக்கப்பட வேண்டும் என்றும் அரசு முடிவு செய்தது. மேற்படி சட்டத்தில் 59 (1) பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டதன் மூலம் இதற்குச் செயல் வடிவம் கொடுக்கப் பட்டது.

சட்டத்திலுள்ள தெளிவற்ற நிலையைத் தவிர்ப்பதற்காக மேற்படி சட்டத் தில் முதலாம் விவர அட்டவணையில் அந்தந்த இடங்களில் அதாவது 1-வது இனத்திலும் 9-வது இனத்திலும் விளக்கப்பகுதிகளில், தட்டச்சு இயந்திர நாடாக்கள், இசைத்தட்டுகள், இசைத்தட்டு ஊசிகள் ஆகியவை திட்ட வட்ட மாகக் குறிப்பிடப்படவேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. மேற்படி சட்டத்தில் 59 (1) பிரிவின் கீழ் ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டதன் மூலம் இதற்குச் செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

@ 288–289 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 12/1973)

[திரு. ப. உ. சண்முகம்] [1973 ஏப்ரல் 3

மேற்படி சட்டத்தில் 59 (2) பிரிவைச் சேர்ந்த முதலாம் வரம்பு நிபந்தனை யின் கீழ், மேற்குறிப்பிட்ட அறிவிப்புகளுக்குப் பதிலாகச் சட்டவரைவு ஒன்று சட்டமன்றத்தின் தற்போதையக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட வேண்டியுள்ளது.

இம்மாநிலத்தில் தற்பொழுது ரப்பர் 3½ சதவீத பலமுனை வரி விதிப்பிற்கு உட்பட்டது. இம்மாநிலத்தில் ரப்பர் முதற்கண் வாங்கப்படும் முனையால் அதற்கு 5 சதவீத ஒருமுனை வரி விதிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.

மேற்கண்ட செயற்குறிப்புகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரித் (திருத்தச்) சட்ட வரைவு (சட்டமன்றப் பேரவைச் சட்டவரைவு எண் 12/73) இம்மேலவையின் ஆலோ சனைக்காக வைக்கப்படுகிறது.

இத் தீர்மானத்தை மேலவை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்): முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1973) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இதிலே ஒரே ஒரு விஷயத்தை முக்கியமாகச் சொல்லிக்கொள்கிறேன். விவசாய இயந்திரங்களுக்குக்கூட 9 சத வீதம் போடுவது என்பது ரொம்ப அதிகமாகத் தெரிகிறது. மற்ற இயந்திரங் களுக்குச் சலுகை காட்டாததுபற்றி பாதகமில்லை. விவசாயிகள் உபயோகிக் கும் இயந்திரங்களுக்குப் போட்டிருப்பது மிகவும் அதிகம் என்று மட்டும் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 'புல் டோஸர்' போன்ற இயந்திரங்களுக்குப் போடப்பட்டிருக்கிறது. டிராக்டர் வாங்குகிற வர்கள் சாதாரண விவசாயியாக இருக்க முடியாது. ஆகையினால் அவை களுக்கு 9 சதவீதம் போடப்பட்டிருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே 'நோட்டிபிகேஷன்' மூலமாகப் போடப்பட்டிருப்பதற்கு சட்ட வடிவம் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன். தலைவா வர்களே, டிராக்டர் என்று தவருகச் சொல்லிவிட்டேன். நான் ஆங்கிலத்தில் படிக்கிறேன். அப்பொழுது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

" There is now no specific entry in the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) to cover items of machinery like Construction Mining and Earth Moving Equipments and Forklift Trucks "

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 12/73) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

[பரிந்துரைகள் ஏதும் இல்லை.]

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

" That the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 12 of 1973), as passed by the Assembly, be returned. "

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்): மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 12/73) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(3) பொது நிறுவனங்கள் முதற் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) : ஒரு அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொது நிறுவனங்கள் குறித்த முதற்குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் கீழ்க்காணும் 5 உறுப்பினர்களை சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்கள் நியமனம் செய்துள்ளார் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன் :

1. திரு. ஏ. பி. ஜனார்த்தனம்